Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆடு (1889) ஆவணியீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - ருரு] யாழ்ப்பாணம்:- ஜய ஹூ ஆவணி மீ கக உ வெள்ளிக்கிழமை (27 AUGU. 1954) [இல - உo]

## திருமுருகாற்றுப்படை — இலக்கிய நயம்

----•----0-0----------

### திருவடிகளை முன்காட்டுஞ்சிறப்பு

முருகனைத் தூரத்திலே முழுமையான ஒரு ஒளிப் பிழம்பாகக் காட்டி அதன்பின்னர் அவனைக் கிட்டுதலாக வைத்து நுணுக்கமாகக் காட்டுவதில் கவிஞர் ஒரு கலைப்பண்பு வாய்ந்த ஒழுங்கைப் பின்பற்றுகிறார் எனலாம்.

(முற்றொடர் — 4)

எதிர்ப்பட்டவனுக்கு முருகனைக் கிட்டுதலாக வைத்துக் காட்டத் தொடங்கிய கவிஞர் முதலில் திருவடித் தாமரைகளைக் காட்டுகின்றார். அடைக்கலம் புகுந்த அன்பர்களைத் தாங்கும் பண்பினையுடையன முருகனுடைய தாள்கள். அவை வலி மிகுந்தவை தாங்குகின்ற எதுவும் வலியுடையதாய் இருக்கவேண்டுமல்லவா?

உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள் உற்றவர்களைத் தான்கள் தாங்க மேலிருந்து பகை கடிந்து அவர்களைக் காப்பவை அவனுடைய கைகள் முருகன் தன் அடியார்களை முனைந்து நின்று காக்கும் பண்பினன் இக்கருத்தைப் புலப்படுத்தப் போலும் கவிஞர் அடுத்து முரு

திரு. சி. முருகவேள்

கன் கைகளைப் பின்வருமாறு காட்டுகின்றார்.

செறுநர்த் தேய்த்த செல்லுறழ்x தடக்கை வல்லென்ற ஓசையும் தடக்கையின் வலிமையைப் புலப்படுத்தல் காண்க. செல்லுறழ் என்றதனுல் எதிர்ந்த எதனையும் அழிக்கும் ஆற்றல் பெறப்பட்டது.

அடுத்து முருகனை மறுவில்லாத கற்பினையுடைய தெய்வயானையுடன் வாழும் இல்லறத்தானாகக் காட்டுகின்றார் கவிஞர். அன்பு ஆதரவும் இல்லாதது முருகன் பாதுகாவல் என்ற கருத்து ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் முருகனை இவ்வாறு இல்லறத் தலைவனாகக் காட்டினர் கவிஞர் என்று கூறலாம்.

மறுவிற் கற்பின் வாணுதல் கணவன் கடலைக் கொண்ட முகில் இடையறாது பொழிவதனுல்செழிப்பாக வளர்ந்திருக்கிறது கானகம். அங்கு கடம்ப மரங்களெல்லாம் இருள்படப் பொதுளி இருக்கின்றன. அக்கடம்ப மரங்களின் தேருருள் போன்ற பூக்களினுலாய குளிர்ந்த மாலை இலாகவமாக புரள்கின்ற மார்பினையுடையவன் முருகன். கானகத்தின் தண்ணறுந் தன்மையும் கடம்ப மரங்களின் அடர்த்தியும் பெருமையும் கடம்ப மாலையின் செழுமையை உணர்த்தி முருகனின் திருவுருவப் பொலிவினை மேம்படுத்துகின்றன -

கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வான்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்

— வளரும்

x இடியோடு மாறுபட்ட

---

ஆசிரியத்தலை

## மது வேண்டும் பொதுவுடைமையினர்!

------=o=------

### போதைப் பழக்கத்துக்காக வக்காலத்து செய்யும் புரட்சிக்காரர்!!

### இவர்களா மக்களை ஈடேற்றக்கூடியவர்......?

உலகப் பெரியார் உத்தம காந்தி அடிகளின் விடுதலைப்போரில் முதல் இடம்பெற்ற மதுவிலக்கை பரதநாட்டில் இன்னமும் முற்றாக அரசாங்கம் ஆதரிக்கவில்லையே என்று கவலைகொள்ளவேண்டிய வேளையில் அவ்வாறு போதைப் பழக்கத்தைச் சட்டப்படி நீக்கிய சென்னை முதலிய இடங்களிற் செம்படையினர் சீனர்களாக ஆசியாவில் நடமாடும் ஆர்ப்பாட்டக்காரர் அக் குடிகேட்டை ஆதரித்து மக்களை ஊக்கப்படுத்துகின்றனர் என்றால் நாட்டின் நலனுக்காகப் பாடுபடுகின்றோம் என்று கூடிக்கூத்தாடிக் கும்மாளம் அடிக்கும் பொதுவுடையினர் ஒரு அரசியற்கட்சியாய் ஆதரிக்கப்படலாமா ............? என்றகேள்வி எழுகின்றது.

ஆந்திராவில் அக்குள்ள தலைவர்களின் ஆராவுழைப்பால் மதுவிலக்கப்பட்டிருக்கப் புரட்சிக்காரர் மக்களுக்குப்போதைப்பொருள் அத்தியாவசியகம் என்ற முறையிற் குடிவகை வேண்டுமென்று கூட்டம் வைக்கிறார்களாம். அரசாங்கத்தை எதிர்க்க ஆயத்தஞ் செய்கிறார்களாம். பொதுவுடைமையினரின் பொதுவான கோலம், எது நிலைமையோ அதை ஆதரிப்பதே என்பதை நாட்டு மக்கள் இன்னமும் அறியாதிருப்பார்களா?

ஈழநாட்டிற்கூட எவ்வகையிலும் புரட்சி இயக்கத்தைப் பரப்பிவிட எழுந்து நிற்கும் பொதுவுடைமைக் கட்சியினர் 'அரசமொழிகள்' இரண்டிருக்கவும் பெரும்பான்மையினர் மொழியை விரும்பியது மட்டுமன்றிப் பட்டின சங்கங்களில் திட்டவட்டமாகச் சட்ட விதியாக்கவும் முயன்றதிலிருந்தே 'பின்வுண்டாக்கும் பிரமுகர்கள்' என்று கண்டுபிடிக்கப் பட்டுவிட்டனர். இலங்கையிலும் குடிகேட்டை நிலைநாட்ட முயலும் அரசியற் கட்சி இடது கட்சியே!

பொதுசனம் பொதுவுடைமையினரின் சுய வேடத்தை அறிந்துய்ய விதி வருங்காலம் அண்மித்துவிட்டது.

---

## தெல்லிப்பழை பாலர்ஞானோதயசபை

### ஆத்மஜோதி ஆசிரியரின் அறிவுரை

மேற்படி சபையாரால் ஆவணி மாதம் 6-ந் திகதி (22—8—54) ஞாயிற்றுக்கிழமை, ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கட்குக் காசிவிநாயகர் ஆலய மண்டபத்தில் ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிற்பகல் 3 மணியளவில் ஸ்ரீ காசிவிநாயகருக்கு விசேஷ தீபாராதனைகளுடன் பூசைகள் நடைபெற்றன. 4 மணியளவில் ஆசிரியர் அவர்களால சிறந்த முறையில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றபின் சபைத்தலைவர் பிரமஸ்ரீ மு. சிவகடாட்சக்குருக்கள் அவர்கள் தலைமையில் வரவேற்புக்கூட்டம் ஆரம்பமாயது. செல்வி சு. கமலாதேவியால் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

ஆசிரியர் திரு. முத்தையா அவர்கள் வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் மக்களாய்ப் பிறந்த நாமனைவரும் யாத்திரைகாரரே யென்றும், நாம் ஆண்டவன் திருவடியை அடைவதற்கு யாத்திரை செய்கிறோமென்றும் அந்த யாத்திரையில் எத்தனையோ இடர்கள் நேரிடினும் சலியாது யாத்திரை செய்யவேண்டுமென்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய "யாத்திரைப் பத்து" என்னும் பகுதியில் யாத்திரையின் விசேடங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டார்.

உ
இன்று (27-8.54)
நல்லைக் கந்தன்
தேர்த் திருவிழாக் காட்சி
*

### போர்ட்சுக்கலின் போக்கு

கோவாவைப்பற்றிய நடுநிலைமையாளர் பேச்சு தெல்கிமாநகரில் நடக்குமென்று செய்திகள் முன்பு கூறின. போர்ட்சுக்கலில் அல்லதுமற்றொருநாட்டில் அப்பேச்சு நடக்க வேண்டுமென்றும் அப்பேச்சு என்ன விஷயத்தில் என்பது வரையறுக்கப்பட வேண்டுமென்றும் போர்ட்சுகல் அரசாங்கம் இப்பொழுது இந்தியாவுக்கு அறிவித்திருப்பதாக மற்றொரு செய்தி கூறுகின்றது.

---

திருப்போரூர்ச் சந்நிதி

## முறைத்திரட்டு

கன்றழைக்கு முன்னே கருதிவரும் ஆப்போல
நின்றழைக்கும் சேயேற்கு நேர்ந்தான்றி—ஒன்றினுக்கும்
அஞ்சாதே வாவென்று அழைப்பாய்தென் போரூரா
எஞ்சாதே பேரருளால் இன்று. (10)

ஈண்டுலகில உன்னை இணங்கறியா சேயேனை
ஆண்டருள்போரூர்வேல் அரசனே—மாண்டு
பிறவாமல் உன்றன் பதப்பூப் பெருந்தேன்
இறைவா எனக்கருள்நீ இன்று. (11)

அன்னம் அளிக்குமூர் அண்டினரைக் காக்குமூர்
சொன்ன மழைபோற் சொரியுமூர் — உன்னினர்க்குத்
தீதுபிணி தீர்க்குமூர் செவ்வேள் இருக்குமூர்
ஓதுதிருப் போரூர்எம் மூர். (12)

கண்டேன்! கவலைசேர் காண்கிலேன் மும்மலமும்
விண்டேன் சுகவீடு மேவினேன் — தொண்டேனக்
காருரும் பூஞ்சோலைக் காலருசித் தேன்பாயும்
போரூரான வாழும் பொருப்பு. (13)

முன்வினதொடர்ச்சி — [7]

# செந்தமிழ்ச் சிவத்திரு நான் மறைகள்

## 'இருக்கு' 'சாமம்' 'வேதங்கள்' ஆராய்ச்சி

—:o:—

திருஞானசம்பந்தர் தேவாரங்களும் தமிழ்நான்மறைப் பொருள் விளக்கமும்

இனித் தமிழ் மறைகள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் அடக்கி நிற்கும் மாண்பு உடைய தென்பதைத் திருஞான சம்பந்தப் பெருமான் தமது தேவாரத் திருப்பதிகங்களில் கூறும் பொருள் மரபாலும் ஆற்றிய அருட்செயல்களாலும் உணர்த்தியருள்கின்றார். நல்லூர்ப் பெருமணப் பதிகத் திருக்கடைக் காப்பில், "உறபொருளாற் சொன்ன ஒண்டமிழ் வல்லார்க கரும்பழி பாவம் அவலமிலரே" என்றும், திருப்பூந்தராய்ப் பண்ணில் "பூந்தராய்ப்பகவனுர் உரைபரவு சொன்மாலைப் பத்தும், வல்லாரகல்வர்தீவினை நல்வினை யோடுடனுவரே" என்றும், அல்லவை தேய அறம் வளரும் பெருநெறியையும், "[illegible]கிலவிய மலைகிறவியோர், எனத் தொடங்கும் திருவீழி மிழலைத் திருப்பதிகத்தில், "பயில்பவர் எழில் மலைமகள், கலைமகள், சயமகள், இனமலிபுகழ்மகள் இசைதர இழிகிலனிடை இனிதமர்வரே" என்று, பொருளும், இன்பமும் பயக்கும் பெருநெறியினையும், திருக்குரங்கணின் முட்டத்துப் பாடிய "விழுநீர் மழுவாட்படை" என்னுந் திருப்பதிகத்தில். தமிழ் மாலை செவிக்கினியதாக, வல்லார்க்கெளியதாம், பிறவாவகைகிடே" என்று யாதினும் அரிதாய வீட்டின்பத்தை எளிதிற் பெறத்தக்கதொரு திருநெறியையும், அறிவுறுத்தித் திருஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தமை தெளிக.

இனித், திருஞான சம்பந்தப் பெருமான் "மழையின்றி வறுமை மிகுந்த காலத்தில், தம் அருந்தமிழ் மறையால், பொருளீட்டிப் பல்லாயிரவர்க்கு அன்னமளித்து, அறம் புரிந்தும், முத்துச் சிவிகை, படிககாசு, முத்துப்பந்தர், உலவாக்கிளி முதலியன பெற்றுப் பொருளீட்டிப் பொருளளித்தும், அடியார்க்கு நோய்தீர்த்தும் விடந்தீர்த்தும் வேண்டியன வேண்டியாங்களித்து, இன்பமருளியும் கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளிக் கொள்ளை கொள்ள விடுதலியும் பெருமை எய்திய அருஞ் செயல்கள் பல ஆற்றி அறம் முதல் நாற் பொருள்களை ஆட்சி புரிகின்றார்,

மாறுமறை நான்கு

இருய் மூகலொன்றாய் இருபெண்ணுண் குணமூன்றாய் என்ற முதலையுடைய திருவீழி மிழலைத் திருப்பதிகத்தில் திருஞானசம்பந்தப் பெருமான் 'மாறுமறைநான்காய் ........ உடனுனன்" எனக் குறிப்பிடுகின்றார். இறைவன் மாறுமறைநான்குந்தானேயான தன்மையன் என்ற கருத்தைத் திருஞான சம்பந்தப் பெருமான் வரைந்து கூறுகின்ற இச்சொற்றொடரால் சுட்டப்படும்" மாறுமறைநான்கும் ஆரிய மறைகளென்றென்று கூற முடியாது. ஆரிய வேதங்கள் ஒரு காலத்து, மூன்றும், பின்னர் நான்காயும் அந்நான்கினும், முன்னர்த் "தைத்திரியம், பௌடிகம், தலவகாரய்' சாமமாகிய

.... .... ... .... ... .... ... ... .... ...

நான்காயும், பின்னர் இருக்கு முதல் நான்காயும் காலந்தோறும் மாறி வருகின்றன. இங்ஙனம் காலந்தோறும் மாறி வளருகின்ற ஆரிய வேதங்களை "மாறுமறைநான்கு, எனத் தமிழ் ஞானசம்பந்தர் சாற்றியருளினரெனச் சான்றுகாட்ட முடியாது என்றும் மாறுத இயல்பு வாய்ந்த அறமுதல் நாற்பொருளையே வழிவழியாகநிலை நிறுத்திவருகின்ற தமிழ்மறைப் பண்பாட்டின் நிலைக்களனாக எழுந்த தம் அருமைத் திருப்பதிகங்களையே மாறுமறைநான்கு என அவர் அருளியிருக்கின்றார். "பொய்யா மறை ஆடல் புரிந்தான்" பண்டு நான்மறையோதிய பாடலன்" "மறையோதி மங்கை பங்கா" "மறைபுனையாடலர்" "மறைகலந்தவொலி பாடலோடாடலர்" என வரும் அருள் மொழிகளால் முன்னர் விரித்துக் கூறியவாறு அறம் பொருள் இன்பம் வீடாகிய, மறைபொருளைப் புனைந்துங், கலந்தும், இலக்கும்பெற்ற நூல்களே ஆகுபெயரால் மறையென்றும், நான்மறையென்றும், தமிழில் அறையப்படுகின்றன வென்பது விளங்கும்.

இனிப் படைப்புப்பொழுதில் இயற்றப்பட்ட நால்வேதங்களும் இப்பொழுது வழக்கில் இருக்கும் இருக்கு முதல் நால்வேதங்களெனக் கூறமுடியாது. இப்பொழுது உள்ள வேதங்களில் சீதை, இராமர், கிருஷ்ணரைப் பற்றிக் கூறும் பகுதிகளும் சுகமுனிவருக்கு வியாசரால் தெளிவிக்கப்பெற்ற "சுகரகசியோபநிடதமும் சனகனர், அகத்தியர், சத்தியவாசகனின் புதல்வர், இராகிதரா முனிவர், பூநசிட்ட முனிகுமாரர், தபோகித்தியர், மௌற்கலர், புதல்வர், நாகர் முதலிய ஆண்களையும், மைத்திரேகி, கார்க்கி முதலிய பெண்களையும் புகழ்ந்து கூறும் பகுதிகளும் அபிமுத்தம், திருப்பாப்பதம் கொடித்தான் மலை, திருக்கேதாரம், திருச்சிற்றம்பலம், திருவாரூர் முதலிய கோவில்களைப்பற்றிக் கூறும் பகுதிகளும் யமன் மனைவியாகிய ஜான்மாலி என்பவளால் தெளிவிக்கப்பட்ட பகுதிகளும் இன்னும் இத்தகைய பல பிற்காலச் செய்திகளும் காணப்படுகின்றன. இவற்றை 'மாறுமறை நான்கு' எனத் திருஞானசம்பந்தப் பெருமான் குறிப்பிட்டருளினர் எனல் எங்ஙனம் பொருந்தும்?

ஆரியவேதங்கள் தம்மை ஆக்கியோன் பெயரைத் தாமே கூறுகின்றன. பிரசாபதி, பிரமன், ஆசுவலாயனர் அனுமார், யாஞ்ஞவற்கியர், தத்தாத்திரேயர், வருணன் முதலியவர்களால் இயற்றப்பட்டதாகக் கூறும் பகுதிகள் பல இருக்கு முதலாய வேதங்களில் காணப்படுகின்றன "வேதப்பசு" என்றமுதலையுடைய வெண்பா இருக்குமுதலிய வேதங்களையே பசுவாக உருவகித்துப்பாடியதாகும். பாடியவரின கருத்தை விளக்கி மறைமலையடிகள் உரை எழுதினர். அங்ஙனம் உரையெழுதினபடியால் மூவர் தேவாரங்களிலும் ஏனைய செந்தமிழ்ச் சிவச்சான்றோர் நூல்களிலும் ஆட்சி பெற்றுவரும் மறை, வேதம் எனுஞ் சொற்கள் இருக்கு முதலான ஆரியவேதங்களைச் சுட்டுகின்றனவெனல் மறைமலை அடிகள் கருத்தாகுமா? அவர் வேதம் பசுவென்ற வெண்பாவில் வேதத்தினும் நால்வர் ஓதுந் தமிழ் மறைகளே சாலச்சிறந்தனெனச் சான்றுகாட்டி நிறுவுகின்றார்.

வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்

**ந. வேந்தனூர் அவர்கள்**

* * * [வளரும்]

# அணிந்துரை அரங்கம்

சுகாதார வாசகம்

(4ம் 5ம் வகுப்புகளுக்குரியது)

அக்கியோன்: Dr S. A. தர்மலிங்கம். சுன்னாகம் வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாரால் அழகாக அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது.

கிடைக்குமிடம்: வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம் சுன்னாகம். விலை: பிரதிஒன்று ரூ 1-25.

காலத்துக்குக் காலம் மாற்றங்கள் நிகழ்ந்தபடியே யிருக்கின்றன. வாழ்க்கைமுறைகள் பல்வேறு வகைகளில் மாறிவிட்டன. புதுப்புது நோய்கள் பலப் பலவாய்ப் பெருகுகின்றன. இந்நோய்ப் பெருக்கத்தை வைத்தியத்தால் மாத்திரம் தடுக்கமுடியாது. இதற்குச் சுகாதாரவாழ்க்கைமுறை இன்றியாத வேண்டப்படுவதாகும். இத்துறையில் வேண்டிய ஆரம்ப அறிவை சுகாதாரவாசகம் 4ம் 5ம் வகுப்புகளுக்குரியது என்னும் வெளியீட்டில் எளிதில் விளங்கக்கூடிய இனியதமிழில் ஆசிரியர் தந்திருக்கின்றார். மாணவருக்குரியது என்றே ஆசிரியரும் பதிப்பகத்தாரும் கருதினரெனினும் சுகாதார அறிவை இதற்குமுன் பெருத ஏனையோர் யாவருமே இதை வாசித்து அதன்படிவாழ்க்கை முறைகளை அமைக்க முயல வேண்டுமென்று நாம் கருதுகின்றோம்.

* * *

விவேகப் பரீட்சை

5ம், 6ம், 7ம், 8ம் வகுப்புகளுக்குரியது

(முதலாம் தொகுதி)

ஆசிரியர்: உடு. திரு வே. மு. சபாரத்தினசிங்கம் B.A. அவர்கள்.

யாழ்ப்பாணம் ஆனந்தா அச்சகத்தாரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பெறுமிடம்: ஆனந்தா அச்சகம் 222 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம் பிரதிஒன்று விலை: ரூபா 1¼

விவேகப்பரீட்சை வேறு வேறுவிதமாய் வெளிவந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் கல்கத்தா வித்தியாபட்டமும் இலங்கைப் போதனா வித்தியாபட்டமும் பெற்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலிய கல்லூரிகளில தலைமை ஆசிரியராகப் பல்லாண்டுகளாய்க் கடமையாற்றிப் "பூகோளத் தொடர்" ஆரோக்கியமும் தேகப்பயிற்சியும்" ஆகிய நூல்களை இயற்றி ஆங்கில இந்துசாதன ஆசிரியராய்த் தொண்டு புரிந்து பெற்ற நீண்டகால அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர் இவ்வெளியீட்டைத் தருகின்றார்.

ஆசிரியர் அவர்களுடைய அநுபவம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அரிய வழிகாட்டியாயமையுமென்பது இயல்பாகவே பெறப்படுதலின் வித்தியா பகுதியார் யாவரும் இதை விரும்பி வரவேற்பரென்று நம்புகின்றோம்.

### கீரிமலை நீர்த்தக்கரைப் பிள்ளையார் திருப்பணி

மூர்த்தி தலம் தீர்த்தம் ஒருங்கமையப்பெற்று விளங்கும், கீரிமலையில் மாருதப் புரவீகவல்லியென்னும் இளவரசியால் தாபிக்கப்பட்ட பழமையான தீர்த்தக்கரைப் பிள்ளையார் ஆலயத்தைத் தற்போது கல் திருப்பணியாகத் திருத்தி அமைக்க ஏழைகளாகிய எங்களால் முடியாமையால் ஒரு சில அன்பர்களின் உதவியைக்கொண்டு திருப்பணியை ஓரளவுக்குக்கட்டி எழுப்பி மிகுதியான வேலைக்குப் போதிய பணமின்றி நிறைவேற்ற முடியாமலிருப்பதை இங்கு வரும் அன்பர்கள் யாவரும் நன்கறிவர் என்பதிற் சந்தேகமேயில்லை. ஆகையால் பிள்ளையாரின் திருவருளை முன்னிட்டு, அன்பர்களாயுள்ளவர்கள், பிரதானமான இத் திருப்பணியில் பங்குபற்றவோ, அல்லது சீமந்து கொடுத்துதவவோ, பொருளுதவவோ முன்வர வேண்டுமெனத் தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன் என்று திருப்பணிச் சபையாரால் நியமிக்கப்பெற்ற தலைமைப் பரம்பரைப் பூசகர் ஸ்ரீ த. செல்லையா அவர்கள் ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

### அரசாங்க அறிவித்தல்

வன பரிபாலனப் பகுதி

N 2258 - 3-9-54 காலை 10 மணி தொடக்கம் புளியங்குளம் அரசினர் மரக்காலையில் 20 கூறுகள் அடங்கிய 20 கழித்த பாலை மரங்கள் —337.3 கன அடி, 498 - ழித்த அரிந்த துண்டு மரங்கள் — 367 4 கன அடி முதலியன பகிரங்க ஏலத்தால் விற்கப்படும். விற்பனைக்கு முன் அவற்றைப் பார்க்க விரும்புவோர் டிப்போ கீப்பரின் அனுமதியுடன்பார்வையிடுவதுடன, அவரிடமிருக்கும் விளம்பரத்தின் பிரதான நிபந்தனைகளை அறிந்து கொள்ள வேண்டும்.

N 2259—77 முதிரை மரங்கள் 660 4 கன அடி, 178 காட்டாமணக்கு மரங்கள் — 1672 4 கன அடி முதலியன விற்பனைக்கு முரசுமோட்டை டிப்போவில் இருக்கின்றன விற்பனவின் விபரம் ஒரு கன அடி—2.50 சதம். வாங்க விரும்புவோர் மனுப்பத்திரங்களை அல்லது வேறு வேண்டிய விபரங்கட்கு முரசுமோட்டை டிப்போ கீப்பருக்காவது அல்லது வடபகுதி வனபரிபாலன அதிபருக்காவது 31-8-54 க்குமுன் எழுதிக்கொள்ளல் வேண்டும்.

G 20-27

# சைவப் பாதிரிமார் தேவை

—————o—————

## நாவலர்பெருமான் இதை நனிவிரும்பினர்

———:0:———

திரு. செ. கோவிந்தசாமி

வரைவது

உலகில் பல சமயங்கள் உள! அவற்றுள் கிறீஸ்த்த சமயம் கிறீஸ்தவ பாதிரிமார்களாலும் - புத்தமதம் - புத்த குருமாராலும் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால் சைவசமயத்தை வளர்ப்பதற்கு அந்த முறைகளில் குருமார் இல்லை. சைவ சமயத்தில் உள்ள பிராமணக் குருமாரும் - மற்றச் சைவக் குருமாரும் சைவ சமயத்தை வளர்க்க மாட்டாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் சீவனோபாயத்திற்காகக் குருமாரென ஆலய சேவை செய்வார்கள். தற்காலத்தில் அவர்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்று உத்தியோகமும் பார்க்கிறார்கள். இதனால் அவர்கள் வருணாச்சிரம நெறியும் குன்றிவிட்டது. இவர்கள் நிலைமை இவ்வாறிருக்க - ஆறுமுக நாவலர் பெருமான் சொன்ன வழிவகைகளுள் அவருக்குப் பின்னால் பெரும்பாலும் சில விடயங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் எமயனேருள் அவர் கூறிய சைவப் பிரசாரகர்கள் எனக் கருதிய சைவப் பாதிரிமார் தோற்றவில்லை என்பதே மனக்கவலைக்கிடமாயிருக்கின்றது. காலஞ்சென்ற சைவப் பெரியார் திரு. சிவபாதசுந்தரனார் அவர்களும் அடிக்கடி இதைச் சொல்வதுண்டு. வடதேசத்திலிருந்து சிலர் யாழ்ப்பாணம் வந்து பிரசங்கங்கள் செய்யுங்காலை இந்த நினைவுகள் சிவபாதசுந்தரப் பெரியாருக்கு வந்துகொண்டேயிருக்கும் - இக்கருத்தை நிறைவேற்றவேண்டும். இவ்விடயத்தை முன் இருந்த பெரியார்களான கல்லூர் திரு. த. கைலாசபிள்ளை, சேர். பொன். இராமநாதன், திரு. அருணாசலந்தை போறை சிவனடியார்கள் முயற்சித்ததாகவும் அவர்கள் காலத்தில் அது கைகூடவில்லையெனவும் சிலர் கூறக் கேட்டுள்ளேம். நாவலர்பெருமானுக்குப் பின்னால் அவர் கூறிய சைவப் பிரசாரகர்கள் தோற்றினாலும் அவர் சொன்ன இலக்கணம் அமைந்த பிரசாரகர்கள் இதுவரையில் தோற்றவில்லை.

நாவலர் பெருமான் இதுபற்றிக் கூறும் மொழிகளை இங்கே கூறுவாம். "நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீட்சிக்கப்பெற்ற பிள்ளைகள் பலரைச் சேர்த்து அன்னவஸ்திரம் முதலியன கொடுத்து உயர்வாகிய இலக்கண இலக்கியங்களோடு சைவசாஸ்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களே உபாத்தியாயர்களாகவும் — சைவப்பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்."

இப்படியாகக் கல்வியறிவு ஒழுக்கங்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களுள் தமவாணையைப் பிறருக்குப் பயன்படும் வண்ணம் செய்ய வேண்டும் என்னும் கருத்துடையவர்களை ஊர்கள்தோறும் அனுப்பி அங்குள்ள திருக்கோயில்களிலே சமயநெறியைப்போதிப்பிக்கவேண்டும்.

திருமடங்களிலேசமடசாஸ்த்திரங்களைப் படிக்கும் துறவிகட்கும் பொருளுதவி புரிந்து அவர்களைத் தமிழ்நாடெங்கும் அனுப்பி சமய நெறியைப் பரப்ப வேண்டும். இதைச் சைவ மக்கள் யாவரும் சித்த சமாதானத்தோடு சிந்தித்து ஆவன செய்வரேல் சைவ சமயம் வளர்ச்சியடையும் என்பதிற் சந்தேகமில்லை!

—————

## இந்திய பிரயாணிகளுக்கு எச்சரிக்கை!

இந்திய அரசாங்க தூதுவர் காரியாலயத்துக்கு நேரிற் செல்வோர் இந்தியாவுக்குப் புறப்படவிருக்கும் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்னும் தபாலமூலம் எழுதுவோர் குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன்னும் பிரயாண உத்தரவு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று குறித்த அதிகாரிகள் அறியச் செய்திருக்கின்றனர்.

——

## போத்துக்கலிற்குப் போவதற்கே தடை

போத்துக்கல்லுக்கோ அல்லது போத்துக்கல் மூலமாகவோ இந்தியர் போவதற்கு உத்தரவுச் சீட்டுக் கொடுக்க இலங்கையில் உள்ள போத்துக்கேய அரசாங்க தூதுவர் மறுக்கின்றாராம்.

## ஆசிரியரின் அறிவுச் சிறப்பு

—0—

பாணந்துறையிலுள்ள பௌத்த பள்ளிக்கூடமொன்றில் ஒரு பிள்ளை கொடுக்க வேண்டிய சம்பளக்காசு கொடுக்கவில்லை. அதற்குத் தண்டனையாகப் பிள்ளையை எழுந்து நிற்கும்படி கட்டளையிட்டார் ஆசிரியர். ஒன்றேகால் மணிநேரம் நின்றபின் மயக்கமுண்டாவதனால் நிற்க முடியவில்லையென்று தண்டனையைத் தணிக்குமாறு இரந்து கேட்டதாம் அந்தப் பிள்ளை. ஆசிரியர் அசையவில்லை. பிள்ளை அறிவுகெட்டு விழுந்து முகத்தில் உண்டான காயங்களுக்கு மருந்து கட்டுவதற்கு வைத்தியரிடம் கொண்டு போகவேண்டி ஏற்பட்டது என்று ஒரு செய்தி கூறுகின்றது.

———

## யாழ். ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

———

பிரவேச, பாலபண்டித, பண்டித பரீட்சைகள்

இவ்வாண்டு சங்கம் நடத்தும் பரீட்சைகள் முன்னர் அறிவித்தபடி ஆகஸ்டுமாசக் கடைசி வியாழன் வெள்ளி சனிக்கிழமைகளில் (23, 24, 25-9-54) நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்றத் தகுதியான (விண்ணப்பம் செய்த) பரீட்சார்த்திகளுக்கு உரியகாலத்தில் பிரவேசச்சீட்டும், நேரசூசியும் அனுப்பப்படும் என்று மேற்படி சங்கக் காரியதரிசி அறியத்தருகின்றார்.

———

## சுக்கானைப்போன்றவை செபத் தியானங்கள்

———

தங்கள் கடமை அது என்று நினைப்பதனால் யாவரும் எதுவோ ஒரு ஒழுக்க முறையைக் கடைப்பிடிக்கின்றனர். ஆனால் கடவுளையுடைய முயல்வோர் எத்தனைபேர்? ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளை நிச்சயமாகச் செய்ய வேண்டும். அது ஒருவனுடைய மனத்தை நல்ல நிலைமையில் வைத்திருக்கின்றது. ஆனால் செபத்தியானங்கள் செய்வதும் அத்துடன் இன்றியமையாது வேண்டப்படும். காலை மாலையிலாயினும் ஒருவர் செபத்தியானங்கள் செய்தல் வேண்டும். அச் சாதனை ஒரு கப்பலுக்குச் சுக்கான் எப்படி அமைகிறதோ அப்படி எங்கள் வாழ்க்கைக்கமையும்.

— சாரதாதேவி

## களுத்துறையில் தமிழுக்குமிடமுண்டாம்

———

சிங்களத்தில் மாத்திரம் தங்கள் அலுவல் நடைபெறுமென்று முன்பு செய்த தீர்மானம் ஒதுக்கப்பட்டுத் தமிழிலும் சங்க அலுவல்கள் நடைபெறுமென்பதாக 20-8-54 ல் நடந்த நகரசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

—————

## மறைஞானசம்பந்தர் குருபூசை

நாள்: ஜயஹூ ஆவணிமீ ௧௪உ (30-8-54) திங்கட்கிழமை

இடம்: சைவபரிபாலனசபை நாவலர் மண்டபம்

நிகழ்ச்சிகள்:

மாலை 6 — 6-30 கடவுளாராதனை

இரவு 6 30 — 7-30 தமிழ் மறையோதல் திரு. தி. கலியாணசுந்தரக் குருக்கள்

7-30 — 8-30 பிரசங்கம் 'மறைஞானசம்பந்தர்' திரு. வே. சோமசுந்தரம்

சைவாபிமானிகள் சமூகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்

சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலனசபை,

யாழ்ப்பாணம், [illegible]–8–54.

M 113 27-8

## எல்லா மதங்களையும் யாவரும் மதிக்கவேண்டும்

———

சைவ பௌத்த கிறிஸ்தவ கோயில்கள் பள்ளிவாசல்கள் ஆகிய இடங்களை அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்களல்லாத மற்றவர்களும் மதிக்கவேண்டுமென்றும் அவ்வாறு மதிக்கச் செய்தற்கு யாவரும் முயல்வதாகவும் சர்வ மதத் தலைவர்கள் மகாநாட்டில் முதல் மந்திரி சேர் ஜோன் கொத்தலாவலைக்கு அங்கே சமூகமளித்த யாவரும் வாக்குறுதிப் பண்ணினராம். இவ்வாறு வாக்குப் பணி மேளமடிக்கும் தொடர்பிலுள்ள தடைச்சட்டத்தை நீக்கும்படி ஓர் பிரேரணை நிறைவேற்றியிருக்கின்றனர்.

———

## நடுநிலை ஆராய்ச்சி நடக்கும்

———

இந்தியாவிலுள்ள போர்த்துக்கேய பகுதிகளின் நிலைமைகளைப் பற்றி நடுநிலையான ஆராய்ச்சி செய்வதற்கு ஒழுங்கு செய்ய வேண்டுமென்று போர்த்துக்கேய அரசாங்கம் விரும்பியதற்கு இந்தியா உடன்பட்டது. அதன்படி தெல்கிமா நகரில் 21-8-54 தொடக்கம் விசாரணை நடைபெறுகின்றது.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப் பெரிய
நகை
வியாபாரிகள்
= O =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

விலாசம்:
67, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணம் ஐக்கியநாணயநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறப்பர்.

# இலங்கை நாட்டின் ஆதி அமைப்புச் சிறப்பு

## தமிழ் மக்களின் சரித்திரம் என்பது சரித்திரப் பிரசித்தி

### அல்ல என்பார் தங்கள் அறியாமையைக் காட்டுவர்

இன்றைய தினம் இலங்கையிலே தமிழ் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவர்களை அநாதைகளாக, அகதிகளாக ஆக்கத் திட்டமிட்டுத் திட்டத்தைச் சட்டங்கள் மூலமாகக் கொண்டு வந்து செயலாற்றுகின்றனர் இலங்கை ஆட்சியாளர்கள். தமிழர்களால் உருவானது தான் இலங்கை என்பதைச் சரித்திரம் தெளிவாகக் காட்டியும், இயற்றியுள்ள சட்டங்களைக் காட்டி சரித்திரத்திற்கே சாவுமணியடிக்க முற்பட்டுள்ளனர். சட்டங்களைக் காட்டி சரித்திரத்திற்கே சாவுமணியடித்து விட்டதாய் அவர்கள் அவர்கள் மட்டில் எண்ணி இறுமாப்புக் கொள்ளலாமே தவிர உலகம் உள்ளளவும் உலக மக்கள் உள்ளளவும் உண்மை வரலாற்றை ஒழித்து விட்டதாக உலகையே ஏமாற்றி விட்டதாக யாரும் எண்ணி இறுமாப்புக் கொண்டால் அது அவர்களின் அறியாமையைத்தான் காட்டும். உலக வரலாற்றைக் கூறும் எல்லா நூல்களும் இலங்கையின் ஆதிவரலாற்றைச் சொல்லத் தவறவில்லை. அப்படி உலக வரலாற்றை எழுதிய ஆசிரியர்களில் ஒருவரான அர்னெல்ட் (Arnold) என்பார் தாமெழுதிய உலக வரலாற்றின் பகுதியொன்றில் இலங்கையைப் பற்றி குறிப்பிடும் பொழுது யாழ்ப்பாணம் உருவான விதத்தை கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்:

இற்றைக்குஏறக்குறைய 2000 வருடங்களுக்கு முன் (அர்னெலட் எழுதிய புத்தகம் 1856-ல் எழுதப்பட்டது) சோழ மண்டலத்திலிருந்து வீரராகவன் என்னும் யாழ்ப்பாடி (யாழ் என்பது ஒரு வகை இசைக் கருவி. அந்த யாழை இசைத்துப் பாடியோருக்கு யாழ்பாடி அல்லது யாழ்ப்பாணம் என்று பெயர்) இலங்கை வந்து கண்டி அரசனிடம் சென்று யாழ் வாசித்தான். யாழின் இசையிலே தன் மனதைப் பறிகொடுத்த அரசன் அந்த யாழ்ப்பாணனுக்கு வெகுமதியாக தன் நாட்டின் ஒரு இடத்தைக் கொடுத்தான். மணற்றிடராய்க் கிடந்த அப்பிரதேசத்தை வெகுமதியாய்ப் பெற்ற யாழ்ப்பாணன் தொண்டை மண்டலத்திலிருந்து மக்களைக் கொண்டுவந்து அதைச் செப்பனிட்டு அம் மக்களை அங்கு குடியேற்றினன். அவர்களை ஆள்வதற்கு ஒருவருமில்லாததால் பாண்டிய நாடு சென்று அங்கு அரசாண்ட மன்னனிடம் யாழ்ப்பாணன் முறையிட அம்மன்னவனும் தன் மகன் ஒருவனை யாழ்ப்பாணனுடன் அனுப்பி வைத்தான். அரச குமாரனின் கை கூழையாக இருந்தபடியால் விசய கூழங்கை மன்னன் என்னும் பெயருடன் முடிசூட்டி அந்நாட்டிற்கும் தன் பெயர் நிலைத்து நிற்கும் பொருட்டு யாழ்ப்பாணம் என்னும் பெயரை வைத்தான் அந்த யாழ்ப்பாடி. இது கி. மு. 101-ம் ஆண்டு நடந்தது.

விசய கூழங்கை மன்னன் மடிந்தபின் அவன் சந்ததியார்கள் வெகுகாலமாக யாழ்ப்பாணத்தை ஆண்டு பற்பல மடமாளிகைகளைக்கட்டி, சைவப்பிரபல்யம் பண்ணிக் கல்விக்கு ஆதரவு காட்டி வளர்த்து ஆதரித்து இரகு வமிசம் முதலான பெயர் பெற்ற காவியங்களையும் செகராசசேகரம் முதலிய வைத்திய நூல்களையும் பாடி அரங்கேற்றுவித்து பேரும் புகழும் அரசாண்டனர். 1371-ம் வருடம் இலங்கைக்குள் புகுந்து கம்பளையிலிருந்து அரசாண்ட 3-ம விக்கிரமவாகுடன் சண்டையிட்டு வெற்றி பெற்று கொழும்பு, நீர்கொழும்பு முதலிய இடங்களில் கோட்டைகள் கட்டி தமிழ் நாட்டை நிறுவிப் புகழ்பெற்றனர். இவர்களின் ஆட்சி கி. பி. 1505-ம் வருடம் வரையிலும் நிலைத்து நின்றது. கி. பி. 1505-ம் ஆண்டு வியாபாரம் செய்யும் நோக்குடன் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் வந்த போர்ச்சுகீசியர்கள் யாழ்ப்பாணத்திற்கும் வந்து கொஞ்சக்காலத்தில் அதைத் தங்கள் வசமாக்கி தங்கள் விருப்பம்போல் கோவில்கள் இருந்த இடந்தோறும் தேவாலயங்களை கட்டி சைவம் முதலான மதங்களை அழித்து உரோமன் மார்க்கத்தை விருத்தியாக்கிக்கொண்டு ஆட்சி செய்து வந்தனர்.

அதன் பின் 1658-ம் ஆண்டு போர்ச்சுகீசியர்களிடமிருந்து ஒலாந்தாக்காரர்கள் பறித்து அவர்களை நாட்டைவிட்டு விரட்டி யாழ்ப்பாணம் முழுவதையும் தங்கள் வசமாக்கிக் கொண்டனர். அவர்களை அடுத்து இங்கிலீஷ்காரர்கள் ஒல்லாந்தாக்காரர்களிடமிருந்து நாட்டை பறித்துக்கொண்டு அவர்களை நாட்டைவிட்டு விரட்டினர். அதன் பின் இலங்கை முழுவதும் ஆங்கிலேயர்கள் வசமாயிற்று. ஆங்கிலேயர்கள் நாட்டைச் சீர்திருத்தம் செய்து ஆங்கிலக்கல்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

### இந்தியர் வெளியேற்றம்

—0—

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படவிருக்கும் 25000 இந்தியருள் முதல் 5000 பேர் 30-11-54க்குள் இந்தியாவுக்குப் போய்விடவேண்டுமென்று அறிவித்தல்கள் கொடுக்கப்படுகின்றன.

### வண்டிச் சவாரிப் போட்டி

யாழ் விநோதக் களியாட்ட விழாச் சபையாரின் ஆதரவில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஒரு வண்டிச் சவாரிப் போட்டி 4, 5-9-54-ல் நடைபெறுமென்று அறிய வருகின்றது.

### திருக்கேதீச்சரத் திருப்பணிக்கு

அறுபது ஆண்டுகளாகத் தொண்டுசெய்துவரும் குடும்பம்

"தவமும் தவமுடையார்க்காகும்" என்றபடி தந்தையாரும் மகனாரும் திருக்கேதீச்சரத் திருப்பணியில் கடந்த அறுபது ஆண்டுகளாக ஈடுபட்டு வருவது பூர்வபுண்ணியத்தின் பயனாகும்" என்று சிவபுண்ணிய சீலராகிய ஸ்ரீமான் சித. மு. பசுபதிச் செட்டியாரவர்களும் அவர் புத்திரராகிய சித. பரமசிவச் செட்டியாரும் திருக்கேதீச்சர ஆலயத்துக்குப்புரிந்த தொண்டினைப் பாராட்டி திருமயிலாப்பூர் சிவஞானச்செல்வரும் மேற்குறித்த ஆலயத்திருப்பணிக்குப் பொருளுபகரித்தவருமாகிய ஸ்ரீமத் சே வெ. ஜம்புலிங்கபிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்.

M. 112 27—8—54.

### முரசுமோட்டைக் குடியேற்றம்

முரசுமோட்டைக் குடியேற்ற விண்ணப்பங்கள் வட பகுதி அரசாங்க அதிகாரிகளால் ஆராயப்படுகின்றனவாம்.

### நயினாதீவுக்கும் போவாராம

முதல் மந்திரி சேர் ஜோன் கொத்தலாவல யாழ்ப்பாணத்துக்கு வரும்பொழுது நயினாதீவுக்கும் போவாராம். அங்கே ஒரு பிரசவ விடுதிச்சாலையைத் திறந்து வைப்பார்.

### சுதேச வைத்தியம்

சுதேச வைத்திய முறைத் திருத்தங்கள் பற்றிச் சுகாதார மந்திரி ஒரு அறிக்கையை அணிமையிற் சமர்ப்பிப்பாராம்.

### புகையிலை ஏற்றுமதி

யாழ்ப்பாணம் மலையாளம் ஐக்கிய புகையிலைச் சங்கத்தார் இந்த ஆண்டு மாத்திரம் ஒரு தொகுதி புகையிலையை இப்போதுள்ள உடன்படிக்கைக்கு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இந்திய அரசாங்கத்தார் உடன்பட்டிருக்கின்றனர்.

### களுத்துறையில் கத்தோலிக்க பௌத்த உறவு

களுத்துறையைச் சேர்ந்த பையாகலையில் கத்தோலிக்கருக்கும் பௌத்தர்களுக்குமிடையே யுண்டான வேறுபாடுகளைப் பற்றி விசாரணைசெய்ய அங்குள்ள கிராமச்சங்கம் முயலுகின்றது.

### போர்ச்சுக்கல் சம்மதிக்குமா?

கோவா நிலைமையைப்பற்றி ஆராய்தற்கு ஒருமுறை விரும்பிப் பின் மறுத்துநிற்கும் போர்ட்சுகல் அரசாங்கத்தைத் திரும்பவும் அத்துறையில் ஆலோசிக்குமாறு இந்திய அரசாங்கம் கேட்டிருக்கிறதாம்.

### அரசாங்க வைத்திய நிலையங்கள்

வைத்தியரில்லா திருந்த முப்பது அரசாங்க வைத்திய நிலையங்களுக்கு வைத்தியர் நியமிக்கப்பெற்றிருக்கின்றனர்.

# வானொலியில் உணவு உற்பத்திப் பேச்சு

## போட்டிகளும் பரிசில்களும்

## ஆவணியில் வரும போட்டிக் கேள்விகள்

ஒவ்வொரு மாதத்திலும் முதற் திங்கட்கிழமைகளில் பிற்பகல் ஏழுமணி தொடக்கம் ஏழரை மணிவரை விவசாய உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்தற்கான சம்பாஷணைகள் உணவு அபிவிருத்திப்பகுதி அதிபரால் நடத்தப்படும். கல்வி, விவசாயம், கூட்டுறவு இயக்கம், கிராம முன்னேற்றம், இறைப் பகுதி முதலிய துறைகளில் வேலை செய்வோரும், மாதர் சங்கங்களைச் சேர்ந்தோரும், விவசாயிகளும் மாணவரும் இந்தச் சம்பாஷணைகளை வானொலியில் கேட்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர். இவைகள் கிராம சஞ்சிகை என்றதலைப்பின் கீழ் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும்.

இப் போட்டிகட்குக் கேள்விகள் ஒவ்வொரு வருடமும் ஆவணி சித்திரை மாதங்களில் முதற் திங்கட்கிழமைகளில் கொடுக்கப்படும்.

முதற்பரிசு ரூ. 30, இரண்டாம் பரிசு ரூ. 20, மூன்றாம் பரிசு ரூ. 15, நான்காம் பரிசு ரூ. 10, ஐந்தாம்பரிசு ரூ. 5.

எல்லா மறுமொழிகளும் M. R. M. ஜெயரத்தினம், உதவி விவசாய பிரசார உத்தியோகஸ்தர், ஆனைக்கோட்டை என்ற விலாசத்திற்கு ஒலி பரப்பப்பட்ட மாதத்தின் நாலாவது சனிக்கிழமை, அல்லது அதற்கு முன் அனுப்பப்பட வேண்டும் என்றும் மேற்படி உத்தியோகஸ்தர் அறியத் தருகின்றார்.

• ஆவணிமாதப் போட்டிக்குக் கேள்விகள் பின் வருமாறு:—

(1) தாழியடித்தல் அல்லது ஊடுழுதலால் நெல் விளைச்சலை அதிகப்படுத்துவதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன?

(2) உங்கள் ஆடுமாடுகள் கூடிய பாலைத் தருவதற்கு என்ன உபாயங்களைக் கையாளுவீர்கள்?

(3) கமங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பாவனையாளர்கட்கும் நஷ்டம் இல்லாத முறையில் வெங்காய உற்பத்தி முறைகளையும், பாடம் பண்ணும் முறைகளையும் எப்படி அபிவிருத்தி பண்ணலாம்?

(4) அறக்கொட்டியான் புழு, நெற்பூச்சி, வெங்காயப பனிம்புழு ஆகிய பூச்சி வகைகளை எப்படித் தடுக்கலாம்?

(5) ஐக்கிய - விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களால் கமக்காரருக்கு என்ன நன்மைகள் உண்டு? இந்தச் சங்கங்களை வெற்றிகரமாக நடத்துவதில் அங்கத்தவர்களின் பொறுப்புகள் என்ன?

# ஈழ வள நாட்டின் ஆதி அமைப்புச் சிறப்பு

5-ம் பக்கத்தொடர்ச்சி

விளையும் புகட்டியதோடு தங்கள் மார்க்கத்தையும் பரப்ப பின்வாங்கவில்லை.

கடைசியாக இந்தியா விடுதலையடைந்தபின் இலங்கை முழுவதும் விடுதலை பெற்றது இங்கிலிஷ்காரர்களிடமிருந்து தற்போதைய யாழ்ப்பாணத்திலே இந்துக்கள், முகமதியர்கள், பௌத்தர்கள் யாவரும் வாழினும் அங்கு பேசப்படும் மொழி திராவிட மொழியான செந்தமிழே என்பது எல்லோருக்கும் தெரியும். இலங்கையிலிருந்து தமிழகத்திற்கும் தமிழகத்திலிருந்து இலங்கைக்கும் தமிழர்கள் குடியேறியுள்ளனர் என்பதற்கும் பல காரணங்களைக் காட்டுகின்றனர் கற்றறிந்த அறிஞர்கள் பலர் இலங்கையின் இன்றைய நல்ல நிலைக்குக் காரணமாயிருந்த தமிழர்களோ ஆசிரிப்பாரினறி அலை கடலுக்கு அப்பால் ஈழநாட்டிலே எள்ளி நகையாடத்தகேரராய் ஆக்கப்பட்டுள்ளனர் — இலங்கை ஆட்சியாளர்களால். இது நியாயந்தானா ....... ....... ....... ....... ? என்பதற்கு காலமே பதில் சொல்ல வேண்டும........!

(தமிழ் நாடு

# குரும்பசிட்டி சன்மார்க்கசபையின் சேவை

## மாகாண அதிபதி பாராட்டு

"இப்படியான ஒரு கிராமத்தில் பலதுறைப்பட்ட ஆக்கவேலைகள் செய்துகொண்டிருக்கும் இச் சபை இலங்கை முழுமைக்குமே ஒரு முன்மாதிரியாக அமைந்து இருப்பதை நான்நேரிற் பார்வையிடுபோது பெரிதும் மகிழ்கிறேன். யாழ்ப்பாணத்துக்கு வருகைபுரிவோர் இச்சபையையும் பார்வையிடுவது நல்லதாகும்"

இவ்வாறு வடமாகாண அதிபர், திரு. ம. ஸ்ரீகந்தா அவர்கள் சென்ற 20-8-54 வெள்ளிக்கிழமை காலை குரும்பசிட்டி சன்மார்க்க சபையைப் பார்வையிட்ட போது கூறினார்கள். அவர்கள் மேலும் கூறியதாது: சன்மார்க்கசபை பல உப சபைகளை அமைத்துக் கிராமத்துக்கு இலகுவாக நல்ல பணிசெய்துகொண்டு வருகிறதென்பதையும் அறியக்கூடியதாக இருக்கிறது. இன்னும் சுவாமி சுத்தானந்தபாரதியார், குன்றக்குடி அடிகளார், திரு. அவிஞசிலிங்கம்போன்ற பெரியோர்கள் தரிசித்து ஆசியளி தனைகண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

சன்மார்க்கசபைச் சார்பில் மாகாண அதிபர் அவர்களை திரு. பூ. சு. நடராசா அவர்கள் வரவேற்றுப் பேசியதாவது: எங்கள் சபை நாற்பது வருடங்களாகக் கருமமாற்றிக கிராம முன்னேற்ற வட்டங்களில் தொடர்ந்து 1947-ம் ஆண்டு தொடக்கம் பாடுபட்டு வருகிறது. இரண்டரை மைல் நீளமான ஒழுங்கையைப் பன்னிரண்டு அடியிலிருந்து இருபத்துநான்கு அடி அகலத்துக்குத் தெருவாக அமைத்து இருக்கின்றது. இதற்காகச் சபை பொதுமக்களிடம் ஓர் இலட்சம் ரூபாய் பெறுமதியான நிலங்களை நன்கொடையாகப் பெற்று ஐயாயிரம் ரூபா வரையிற் செலவு செய்தும் இருக்கிறது. கிராம முன்னேற்றச் சங்கம் சுய முயற்சியாற் செய்த வேலையை அரசினர் கையேற்றுப் பகிரங்க வீதியாக அங்கீகரிக்காமை கண்டு சபை ஏமாற்றமடைவதோடல்லாமல் புதுவேலையில் — உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் — ஈடுபடமுடியாமலும் இருக்கிறது. பகிரங்க வீதியே இல்லாத இக் கிராமத்துக்கு இத் தருவே உணவுப் பொருள் அபிவிருத்திக்குப் பற்றுமதி—இறக்குமதி வசதிக்கும் வசதியாக இருத்தலின் சபையார் அமைத்த தெருவைத் தாங்கள் பகிரங்க வேலைப் பகுதியினர் ஏற்பதற்கு எல்லா நடபடிக்கைகளும் எடுத்துதவி இச் சபையின் இம்மாதிரியான முயற்சிகளுக்கு மென்மேலும் உற்சாகமளிக்கச் செய்வீர்களென எதிர்பார்க்கிறோம்.

சன்மார்க்க மாதர் சங்கத்தையும் தையற் பாடசாலையையும் பார்வையிட்டு மாதர்சபைக்கு மண்டபம் அமைக்கவும் தையல் இயந்திரங்கள் பெறவும் நன்கொடைப் பணம் பெற்றுத் தருவதாக அதிபதியவர்கள் தெரிவித்தார்கள்.

சன்மார்க்கசபைத் தலைவர் திரு. நா. சிவசாமி ஆசிரியர் தலைமை வகித்தார். வலி வடக்குக் காரியாதிகாரி திரு. ந சிவஞானசுந்தரம் அவர்களும் சமுகமாயிருந்தார்கள்.

1—4—53 தொடக்கம் 3—3—54 முடிய நாவலர்

சைவாச்சிரம நாவலர்மண்டபத்தில் சமயத்தொண்டுகள்

# குருபூசை நிகழ்ச்சி வரலாறு

———————o———————

| தேதி | குருபூசை | உபயகாரர் \| பகல்நிகழ்ச்சி — இராநிகழ்ச்சி \| விஷயம் \| பிரசாரகர்கள் |
|---|---|---|
| 1-4-53 | காரைக்காலம்மையார், | திரு ஆ. சுப்பிரமணியம் அவர்கள் பாரியார், "காரைக்காலம்மையார்" திரு. பொ. அப்புக்குட்டி, திரு வே. சோமசுந்தரம் |
| 26-4-53 | உமாபதிசிவாச்சாரியார் | திரு. K நல்லையா, உமாபதிசிவாச்சாரியார், பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர் திரு. சி நாகையா |
| 8-5-53 | திருநாவுக்கரசுநாயனார் | திரு அ. அருணாசலம், நாயனார்சரித்திரம்படித்தல் ஆராதனை மாகேசுரபூசை "அப்பர்காட்டிய அருள்நெறி" "வாகீசப்பெருந்தகைதன் ஞானப்பாடல்" பிரம்மஸ்ரீ வ மு இரத்தினேசுவரஐயர், பண்டிதர் திரு. கா. சமரவாயம், |
| 18-5-53 | சேக்கிழார்நாயனார் | திரு சு. கனகசபை, புராணபடனம், சேக்கிழார்புராணம். ஆராதனை, மாகேசுரபூசை, சேக்கிழார்நாயனார் பிரம்மஸ்ரீ வ மு இரத்தினேசுவரஐயர் |
| 30-5-53 | திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், | திரு வை. சி. சி. குமாரசுவாமி, நாயனார்சரித்திரம்படித்தல், ஆராதனை மாகேசுரபூசை, "திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்" திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை |
| 27-6-53 | அருணகிரிநாதர் | திரு. அ. கனகசபாபதி — "அருணகிரிநாதர்" திரு பொ. அப்புக்குட்டி |
| 14-7-53 | மாணிக்கவாசகசுவாமிகள் | டாக்டர் க. இராசா புராணபடனம், திருவடிபெற்றசருக்கம், ஆராதனை மாகேசுரபூசை, "மாணிக்கவாசகசுவாமிகளும் மனிதவாழ்க்கையும்" 'திருவாசகமும் தமிழும்' திரு பொ அப்புக்குட்டி, திரு பொ கிருஷ்ணபிள்ளை |
| 20-7-53 | சுந்தரமூர்த்திநாயனார் | திரு. சி அமிர்தலிங்கம், திரு மு மயில்வாகனம் அ பொன்னுத்துரை புராணபடனம் வெள்ளானைச்சருக்கம் ஆராதனை மாகேசுரபூசை, சுந்தரமூர்த்திநாயனார்உற்சவம் |
| 30-7-53 | பட்டினத்தடிகள், | திரு. இ. சிவகுருநாதர் 'பட்டினத்தடிகள்' திரு. பொ. அப்புக்குட்டி திரு. ம வே திருஞானசம்பந்தபிள்ளை |
| 9-9-53 | மறைஞானசம்பந்தர் | டாக்டர் வெற்றிவேலு அவர்கள் பாரியார் "மறைஞானசம்பந்தர்" திரு. வே. சோமசுந்தரம் திரு பொ. கருணாகரர் |
| 5-10-53 | அருணந்திசிவாச்சாரியார் | திரு. மு. செல்வத்துரை, 'அருணந்திசிவாச்சாரியார்' பிரம்மஸ்ரீ வ மு இரத்தினேசுவர ஐயர் |
| 22-10-53 | திருமூலநாயனார் | ஸ்ரீமதி வ செல்லம் 'திருமூலநாயனார்' திரு. பொ கருணாகரர், திரு. வே. சோமசுந்தரம் |
| 6-11-53 | மெய்கண்டதேவர் | ஸ்ரீமதி வ. செல்லம் 'மெய்கண்டதேவர்' திரு. பொ. அப்புக்குட்டி |
| 28.11.53 | ஆறுமுகநாவலர் | திரு. க. சண்முகரத்தினம் நாவலர்சரித்திரம்படித்தல், ஆராதனை மாகேசுரபூசை, 'ஆறுமுகநாவலர்' திரு. செ. கனகசபாபதிப்பிள்ளை, திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை, திரு. க. சிவாலிங்கம் B. A. |
| 16-1-54 | கண்ணப்பநாயனார் | ஸ்ரீமதி வ. செல்லம் 'கண்ணப்பநாயனார்'. திரு. பொ. அப்புக்குட்டி பிரம்மஸ்ரீ வ மு இரத்தினேசுவரஐயர் |
| 23-1-54 | சண்டேசுரநாயனார் | திரு. ச. சீனிவாசகம் 'பசுவோம்பல்' 'சிவபூசைமகிமை' பிரம்மஸ்ரீ வை. ஆத்மநாதசர்மா, பிரம்மஸ்ரீ வ மு. இரத்தினேசுவரஐயர் |
| 13-2-54 | கச்சியப்பசிவாச்சாரியார் | சபை "கச்சியப்பசிவாச்சாரியார்" பிரம்மஸ்ரீ வ மு இரத்தினேசுவர ஐயர், திரு ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை |
| 20-2-54 | திருவள்ளுவர் | திரு ஐ. சின்னையா, 'திருவள்ளுவரும்சமயமும்' "திருக்குறளின் பெருமை" "திருவள்ளுவரும் அரசியலும்" பிரம்மஸ்ரீ வ மு [illegible]ரத்தினேசுவரஐயர் பிரம்மஸ்ரீ வை. இராமசாமிசர்மா, தி[illegible] சம சிவப்பிரகாசம் |

17-4-54 யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் புதுவருடவிழாக்கொண்டாடப்பட்டது, விசேஷ முறையாகக் கடவுளாராதனை நிகழ்ந்தபின் திரு. பொ. அப்புக்குட்டி அவர்களாலும திரு. வே. சகாராபிள்ளை அவர்களாலும் சைவப் பிரசங்கங்கள் செய்யப்பட்டன பின்பு சிற்றுண்டி தேநீர் வழங்கப்பட்டன.

19-6-53 ஆனி உத்தரத்திலன்று பலஸ்திபுரச் சவாலயத்தில் நிகழ்ந்த அபிஷேகாதி உற்சவங்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து சபையாரால் ஒரு யாத்திரைக்கோஷ்டி அனுப்பப்பட்டது.

16-10-53 சரசுவதிபூசை சிறப்பாக நடைபெற்றது.

13-11-53 ஐப்பசிக்கடைசி வெள்ளிக்கிழமையன்று பணிக்கூடப்பிள்ளைகளுக்கும் பிறருக்கும சமயதீக்ஷை நிர்வாணம் ஸ்ரீமத் க. வைத்தியநாதக்குருக்கள் அவர்களால் செய்யப்பட்டது.

29-3-53 திருவிளையாடற் புராணம படிக்க ஆரம்பிக்கப்பட்டு 12-8-53ல் பூர்த்திப் படுப்பு நிகழ்ந்தது.

3-3-54 சிவராத்திரி வழிபாடு சிறப்பாக நான்கு யாமப் பூசைகளுடன் நடைபெற்றது. பிரமஸ்ரீ சீதாராமசாஸ்திரியவர்களால் வேததத்துவயனம் செய்யப்பட்டது. ஸ்ரீமத் மு. சுப்பையாதேசிகர் தமிழ்மறையோதினர். சிவபாத்துவம என்னும் பொருள்பற்றி பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்களும், சிதம்பர மகிமை என்னும பொருள்பற்றி திரு. வே. சோமசுந்தரம அவர்களும் அடியார் பெருமை என்னும் பொருள்பற்றி திரு சி. கணபதிப்பிள்ளையவர்களும் சொற்பொழிவாற்றினர். ஈற்றில் கந்தபுராணம் அடிமுடிதேடுபடலம் படித்துப் பயன் சொல்லப்பட்டது.

(மாகேசுர பூசைக்குத் தேவையான அரிசியைப் புண்ணியநாச்சிமடகருமக் காணிகளின் குத்தகை நெல்லிலிருந்து பெறுகின்றோம்.)

23-7-54 ல் நிகழ்ந்த திருவாசகசபைக்கூட்டத்தில் இவ்வறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்.

## விசேட சிவாராதனை

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் அண்மையில் சபை நாவலர் மண்டபத்தில் நிகழ்ந்த கந்தபுராணப் பூர்த்திப் படிப்பின் தொடர்பாக மேற்படி மண்டபத்தில் சிவப்பிராமணர்களால் 17-8-54 செவ்வாய்க்கிழமை விசேட க்ஷணிகலிங்க சிவபூசை செய்யப்பட்டது பல அன்பர்கள் தரிசனஞ் செய்தனர். பின்பு பிராமணர்களுக்கு சமாராதனை நடைபெற்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்றுறை டிக்குவெஸ்ற் கோட்டில் சரவணை குழந்தைதம்பி செல்லப்பாபிள்ளை

வழக்காளி,

இல. 7295

எதிராக

சரவணை யகசோசந்திரா சைம்பெண் யக்கோவாள் — எதிராளி.

ஊர்காவற்றுறை டிக்குவெஸ்ற் கோட்டின் 7295ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1954 ஆண்டு புரட்டாதி மீ 14உ செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 287/50ம் ரூபா 250 க்கு 11-12-53 தொடக்கம் 12.2.54 வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறக்கும்வரை 5 வீதமான வட்டியும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணையிலுள்ள "குரியபர்றையும் குரியவத்தையும்" மேற்குப்பக்கமாக செ பா. பத்தலாயும் 10½ வீடும் கிணறும் பனைகளும் எல்லை கிழக்கு சவிரிமகன் ஞானப்பிரகாசிவிளுதனம். வடக்கு தொம்மை குசையிளுதனம், மேற்கு வேலுப்பிள்ளை பெண் சிவனம்மாவிளுதனம். தெற்கு நீக்கிலாள் சையபெண் மசேலியாளினுதனம். இதடங்கலும். ஆனல் கிணற்றில் பிறபங்காளருக்குரிய தண்ணீர்பங்கும் அர்லை வழிவாய்க்கால்பாவிப்புரித்தும பிறநீங்கலாக.

1954ம் ஆண்டு ஆடி மீ 14ம் உ

வை, ஏரம்பமூர்த்தி
கொமிஷனர்,
M. 78 20, 27—8—54.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Friday August 27 1954'